# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

www.dhinathdhalam.com

நடுநிலை நாளிதழ்

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 169 | செவ்வாய்க்கிழமை Tuesday | 15.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# சிறப்பாக பணியாற்றிய 180 பேருக்கு 'அண்ணா சிறப்புப் பதக்கங்கள்' தமிழக அரசு அறிவிப்பு



சிறப்பாக பணியாற்றிய 180 பேருக்கு 'அண்ணா சிறப்புப் பதக்கங்கள்' வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியாகியுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ் நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை. சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை. ஊர்க்காவல் படை விரல்ரேகைப் கூடம் மற்றும் தடய அறிவியல் துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களின் சிறப்பான பணிகளை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாள் தமிழக முதல்-அமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

அண்ணா சிறப்புப் பதக்கங்கள்

இந்த ஆண்டு, காவல் துறையில், தலைமைக் காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 138 நபர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், தீயணைப்பு வீரர் முதல் துணை இயக்குநர் வரையிலான 20 நபர்களுக்கும். சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையில், முதல் நிலை சிறைக்காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான 10 நபர்களுக்கும் ஊர்க்காவல் படையில், ஊர்க்காவல் படைவீரர் முதல் படைத்தளபதி வரையிலான 5 நபர்களுக்கும், விரல்ரேகைப் பிரிவில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கும் மற்றும் தடய அறிவியல் துறையில் 4 அலுவலர்களுக்கும். அவர்களின் மெச்சத்தக்க பணியினை அங்கீகரிக்கும் வகையில் தமிழக முதல்-அமைச்சரின் அண்ணா சிறப்புப் பதக்கங்கள் வழங்கிடதமிழ்நாடு முதல்-அமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், 19.05.2026 அன்று காலை சுமார் 09.45 மணியளவில், நாகர்கோவில் லெமூரியா கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த கணபதிபுரத்தைச் சேர்ந்தஇருகுழந்தைகள் ராட்சத கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு, அதில் 9 வயதுடைய வைஷ்ணவி என்ற சிறுமியை மட்டும் பொதுமக்கள் காப்பாற்றிய நிலையில், 9 வயதுடைய சிறுவன் சைலேஷ் கடலுக்குள் சுமார் 100 அடி தொலைவில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். இந்நிலையில், தனது இரவுப் பணியை முடித்துவிட்டு, வீடு திரும்பி கொண்டிருந்த நாகர்கோவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தைச் சேர்ந்த தீயணைப்பு ஓட்டுநர் ஆர். ராஜசேகர் மேற்படி தகவலை கேள்விப்பட்டவுடன் ராஜாக்கமங்கலம் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்துவிட்டு, உடனடியாக கடற்கரைக்கு விரைந்து சென்று அங்கிருந்த உயிர்காக்கும் மிதவையை பயன்படுத்தி, தன் சொந்த பாதுகாப்பை பற்றி கவலைப்படாமல் கடலில் நீந்தி சென்று அச்சிறுவனை மீட்டுக் கரைக்கு கொண்டு வந்து அச்சிறுவனின் உயிரை காப்பாற்றினர்.

அண்ணா வீரதீர் பதக்கம்

கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர்,கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர்,மாவட்ட ஆட்சியர், ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அன்னாரது துணிச்சலான செயலை வெகுவாக பாராட்டியுள்ளார்கள். இவரின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு செயலை பாராட்டி இவருக்கு தமிழக முதல்-அமைச்சரின் தீயணைப்பு பணிக்கான அண்ணா வீரதீர் பதக்கம் வழங்கிட தமிழ்நாடு முதல்-அமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேற்கண்ட பதக்கங்கள், தமிழ்நாடு முதல்-அமைச்சர் அவர்களால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பெரியார், அண்ணா பேரணிக்கு அனுமதி மறுப்பு ஏன்? முதலமைச்சர் விஜய்க்கு, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி கேள்வி



பெரியார் மற்றும் அண்ணா பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, முதல்வர் சி. ஜோசப் விஜய்க்கு, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி தன்னுடைய எக்ஸ் தளத்தில் தெரிவித்திருப்பதாவது:

"தந்தை பெரியாரின் பிறந்த நாளை முன்னிட்டு அவர் பிறந்த ஈரோட்டு மண்ணில் தி.க. சார்பில் செப்டம்பர் 17-ஆம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணிக்கும்,

குடியாத்தத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு தி.மு. கழகம் உள்ளிட்ட கட்சிகள் நடத்தவிருந்த பேரணிக்கும், இந்த சர்க்கஸ் அரசின் காவல் துறைஅனுமதிமறுத்து இருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.

முதல்வரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல் துறை, வலதுசாரி அமைப்புகளின் பேரணிகளுக்கு அனுமதி வழங்கிவிட்டு, தமிழ்நாட்டை செதுக்கிய பெரியார் - அண்ணாவின் பிறந்த நாள் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பது ஏன்?

பெரியாரையும், அண்ணாவையும் கொள்கைத்தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் முதல்வர், யாரை திருப்திப்படுத்த இதைச் செய்கிறார்?

காவல்துறை,முதல்வரின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? இல்லை அவரது காவி எஜமானர்களின் கட்டுப்பாட்டுக்கு சென்றுவிட்டதா? பெரியார் - அண்ணாவை புறக்கணிக்கும் ரீல்ஸ் முதல்வர், அவருடைய அடிமைத்தனத்தையும் - ஆணவத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, உடனே இந்த பேரணிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்-அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கும்காவல்துறை,வலதுசாரி அமைப்புகளின் பேரணிகளுக்கு அனுமதி வழங்கிவிட்டு, தமிழ்நாட்டை செதுக்கிய பெரியார் - அண்ணாவின் பிறந்தநாள் பேரணிகளுக்கு அனுமதி மறுப்பது ஏன்? பெரியாரையும், அண்ணாவையும் கொள்கைத்தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் முதல்-அமைச்சர், யாரை திருப்திப்படுத்த இதைச் செய்கிறார்? காவல்துறை, முதல்--அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? இல்லை அவரது காவி எஜமானர்களின் Control-க்கு சென்றுவிட்டதா?

பெரியார் - அண்ணாவை புறக்கணிக்கும் ரீல்ஸ் முதல்-அமைச்சர், அவருடைய அடிமைத்தனத்தையும், ஆணவத்தையும் மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, உடனே இந்த பேரணிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். இவ்வாறு அதில்தெரிவித்துள்ளார்.

# எந்த அழுத்தத்திற்கும் அடிபணியமாட்டேன்... சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் பேட்டி



எந்ததுண்டிற்கும் நான் பயந்தவன் அல்ல என்று சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் கூறியுள்ளார்.

நெல்லையில் சட்டபேரவை சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:- எந்த துண்டிற்கும், எந்த சீட்டுக்கும் நான் அடிபணிய மாட்டேன். எனக்கு இருக்கும் சந்தேகங்களை என்னுடைய துறைசார்ந்த சட்டப்பேரவை அலுவலர்களிடம் இருந்து சில குறிப்புகளை கேட்டு வாங்குவேன். சர்க்காரியா கமிஷன் எந்த ஆண்டில் சட்டப்பேரவை பேசப்பட்டது என்பது குறித்த குறிப்புகளை எடுத்து தாருங்கள் என்று கூறினேன். ஏனென்றால், விவாதத்திற்கு உடனடியாக தயாராக வேண்டும் என்பதால் அவைக்குறிப்பில், அவை இருப்பது எனக்கு தெரிந்தும், அவற்றின் தேதிகளை பற்றி கேட்டேன். அதைப்பற்றிய துண்டுச்சீட்டைத்தான் கொடுத்தார்கள்.

சபையை எப்படி நடத்தவேண்டும் என்றும் யாரை பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும், எனக்கு நன்றாக தெரியும். என்னை பொறுத்தவரையில் கேட்ட நேரமும், ஒதுக்கப்பட்ட நேரமும் அவர்களுக்கு போதும் என்று நான் எண்ணுகிறேன். மேலும், அதிமுக எம்.எல்.ஏக்கள் ராஜினாமா செய்த 2 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 4 தொகுதிகளுக்கான ராஜினாமா கடிதங்கள் பரிசீலணையில் உள்ளன.

இவ்வாறு அவர் பேசியுள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# இஸ்ரோ சாதனை: மாணவர்கள் வண்ண பலூன்கள் பறக்கவிட்டு பாராட்டு



தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில், இஸ்ரோ சார்பில் புவி கண்காணிப்பு பணிகளுக்காக ஜிசாட்-1ஏ (EOS-05) செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதைப் பாராட்டி மாணவர்கள் வண்ண பலூன்களைப் பறக்கவிட்டனர்.

இஸ்ரோவின் இந்த சாதனை குறித்து பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் மாணவர்களுக்குவிளக்கினார். ஜிசாட்-1ஏ செயற்கைக்கோள் மூலம் வ ா னி லை , வேளாண்மை, பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு பயனுள்ள தகவல்கள் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் விண்வெளி சாதனைக்காக பாடுபட்ட இஸ்ரோ விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அனைவருக்கும் மாணவர்கள் பாராட்டு தெரிவித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரியர் ஸ்ரீதர் மற்றும் ஆசிரியை சிவரஞ்சனி செய்திருந்தார்கள் .

# ஈரோடு திண்டல் கியா ஷோரூமில் புதிய ‘சொரெண்டோ’ கார் அறிமுக விழா:

## அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்பு



ஈரோடு திண்டல் பகுதியில் அமைந்துள்ள பிரஸ்ஸானா கியா ஷோரூமில், அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய 'கியா சொரெண்டோ' காரின் அறிமுகவிழா கோலாகலமாக நடைபெற்றது.

இ வ் வி ழ ா வி ல் அ மை ம ச் ச ர் க ள் கே.ஏ.செங்கோட்டையன், விஜய பாலாஜி மற்றும் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கே.கே.ஆனந்த்மோகன் ஆகியோர் கலந்துகொண்டு, புதிய காரை அ தி க ா ர ப் பூ ர் வ ம ா க திரைநீக்கம்செய்து அறிமுகப்படுத்தினர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அ மை ம ச் ச ர் கே.ஏ.செங்கோட்டையன், மக்களுக்கு விரைவாகவும் வெளிப்படையாகவும் சேவைகளை வழங்கும் தூய்மையான ஆட்சியைத் தருவதே அரசின் முதன்மை நோக்கம் என்றார்.

மேலும் முதலமைச்சர் துறை வாரியாக நேரடி ஆய்வுகள்மேற்கொண்டு திட்டங்களை நிறைவேற்றி வருவதாகக் குறிப்பிட்ட அவர்,ஈரோடு மண்டல வளர்ச்சிக்கு அமைச்சர் பாலாஜி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த்மோகன் ஆகியோர் சிறப்பாகச் ெ ச ய ல ா ற் றி வருவதாகப் பாராட்டினார்.

நிகழ்ச்சியின் நிறைவில்புதியகாரின்சொகுசு வசதிகள் மற்றும் நவீன தொழில்நுட்ப அம்சங்களை அமைச்சர்கள் பார்வையிட்டனர். பின்னர் ஷோரூம் நிர்வாகிகள் மற்றும் ப ணி ய ா ள ர் க ளி ன் வேண்டுகோளை ஏற்று அவர்களுடன் செல்பி புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்நிகழ்வில் நிறுவன உயர் அதிகாரிகள், தொழில் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

# விநாயகர் சதுர்த்தி தொடர் விடுமுறை: அரசு பஸ்களில் 2.31 லட்சம் பேர் பயணம்



விநாயகர் சதுர்த்தி தொடர் விடுமுறையையொட்டி, சென்னையில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அரசு பஸ்களில் 11, 12-ந்தேதிகளில் 2 லட்சத்து 31ஆயிரம்பேர்பயணம் செய்துள்ளனர்.

தொடர் விடுமுறை முடிந்து 14 மற்றும் 16-ந் தேதிகளில் சென்னை திரும்புவார்கள் என எ தி ர் ப ா ர் க் க ப் ப டு கிறது

. இதையொட்டி, பயணிகள் சிரமமின்றி சென்னை திரும்பும் வகையில் 14-ந்தேதி 2,240 சிறப்பு பஸ்களும், 15-ந்தேதி 1,325 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமி ட ப் ப ட் டு ள் ள து . மொத்தம் 3,565 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

மேலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கிளாம்பாக்கம் வரும் பயணிகள் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு செல்லும் வகையில், மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்துத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இலவச வேஷ்டி, சேலை உற்பத்திக்குக் கூலி உயர்வு: விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பில் தீர்மானம்

ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில், மாநிலத் தலைவர் எல்.கே.எம். சுரேஷ் தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.


தமிழ்நாடு அரசு இலவச வேஷ்டி - சேலை உற்பத்திக்குக் கூலி உயர்வு வழங்குவது தொடர்பாக 5 நபர்கள் கொண்ட சிறப்புக் குழுவை அமைத்துள்ளது. இது குறித்து ஆ லோ ச ிப் ப த ற் க ா க அமைக்கப்பட்ட இக்கூட்டத்தில் ஈரோடு, சித்தோடு, லக்காபுரம், வீரப்பன்சத்திரம் மற்றும் திருச்செங்கோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த விசைத்தறி சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு விரிவாக விவாதித்தனர்.

கூட்டத்தில், கூலி உயர்வு தொடர்பான கோரிக்கைகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றி அரசு அமைத்துள்ள குழுவிடம் முறைப்படி வழங்குவது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

மேலும், விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் கூட்டமைப்பு சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள கூலி உயர்வுக் கோரிக்கைகளை அரசு விரைந்து நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் தீர்ம ா ன ம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் கூட்டமைப்பின் மாநிலப் பொருளாளர்(சித்தோடு) கே.பாலசுப்ரமணியம், இணைச் செயலாளர் எ ல் . பி . ப ா ல சு ப் ர மணியம், ஈரோடு சங்கச் செயலாளர் ராசு (எ) பழனிச்சாமி, பொருளாளர் செல்லாராம் மணி, சித்தோடு சங்கப் பொருளாளர் ராஜீ, லக்காபுரம் சங்க நிர்வாகி செந்தில், திருச்செங்கோடு சங்க நிர்வாகி ராஜ்குமார் மற்றும் வீரப்பன்சத்திரம் சங்க நிர்வாகி சுரேஷ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

# சிதம்பரத்தில் அம்பேத்கர் சிலை சேதம்: போலீசார் குவிப்பு



சி த ம் ப ர ம் : சிதம்பரத்தில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மர்ம நபர்கள் அம்பேத்கர் சிலையை சேதப்படுத்தியதால், அங்கு பாதுகாப்புக்காக போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

சிதம்பரம் சி. கொத்தங்குடி பகுதியில் அம்பேத்கர் சிலை பாதுகாப்புடன் கூண்டுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு மர்ம நபர்கள் அம்பேத்கர் சிலையை மூடியிருந்த இரும்பு கூண்டை உடைத்து தூக்கி எரிந்து, சிலையில் உள்ள அவரது கண்ணாடி உள்ளிட்ட பகுதிகளை சேதப்ப டு த் தி வி ட் டு தலைமறைவாகி விட்டனர். இது குறித்து தகவல் அறிந்த சிதம்பரம் உதவி காவல் கண்காணிப்பாளர் சத்திரிய கவின் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

குற்றவாளிகளை கைது செய்யும் வரை கூண்டு வைக்க விடமாட்டோம் என போலீசாரிடம் அப்பகுதி மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அ ப் ப கு தி யி ல் முன்னெசரிக்கை நடவடிக்கையாகஉதவிகாவல் கண்காணிப்பாளர் சத்திரிய கவின் தலைமையில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அப்பகுதியை சேர்ந்த இரண்டு இளைஞர்களை போலீசார் விசாரணைக்கு அழைத்துச் சென்ற நிலையில், அவர்களின் உறவினர்கள் தடுக்க முயற்சித்துடன் தற்கொலை செய்து கொள்வதாக வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

# 25 லட்சம் ரூபாய் நோட்டுகளால் அலங்கரிக்கப்பட்ட ஏலேல சிங்க விநாயகர்!



காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயில் சந்நிதி தெருவில் அமைந்துள்ள ஏலேல சிங்க விநாயகர் ரூ. 25 லட்சம் மதிப்பிலான ரூபாய் நோட்டுகளால் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

ஆண்டுதோறும் வரும் விநாயகர் சதுர்த்தி நாளன்று காஞ்சிபுரம் ஏலேல சிங்க விநாயகர் கோயிலில் உள்ள மூலவருக்கு ரூபாய் நோட்டுக்களால் அலங்கரிக்கப்படுவது வழக்கம். நிகழாண்டு விநாயகர் ச து ர் த் தி யை யொ ட் டி ஆ ல ய த் தி ல் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன. பின்னர் ரூ. 25 லட்சம் மதிப்பிலான ரூபாய் நோட்டுகளால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனைகள் நடைபெற்றன.

ரூ. 1, ரூ. 2, ரூ. 5, ரூ. 10, ரூ. 20, ரூ. 50, ரூ. 100, ரூ. 200, ரூ. 500 ஆகிய புதிய ரூபாய் நோட்டுகளால் சந்நிதி மற்றும் கருவறை முழுவதும் அலங்கரிக்கப்பட்டு ஏலேல சிங்க விநாயகர் பக்தர்களுக்கு க ா ட் சி ய ளி த்தார்.

இதனையடுத்து, ஏராளமான பக்தர்கள் புதிய ரூபாய் நோட்டுகளால் சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்து அருள்பாலித்த விநாயகரை பயபக்தியுடன் வேண்டி, சுவாமி தரிசனம் செய்து வழிபட்டு வருகின்றனர்.

மேலும், வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# தமிழக வெற்றிக்கழகம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை மதசார்பற்ற சமூக நிதி வெற்றி கூட்டணி சார்பில் ஆதரித்து வெற்றி பெறச் செய்ய விடுதலை சிறுத்தைகள் கட்சி களப்பணி ஆற்ற உள்ளது

## வி.சி.க. தலைவர் திருமாவளவன் பேட்டி



மதுரை அவனியாபுரத்தில் மலைச்சாமி நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்ற விசிக தலைவர் திருமாவளவன் வருகை தந்தார் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து கூறுகையில்;-

தமிழகத்தில் இரண்டு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.இந்த இரண்டு தொகுதிகளுக்கும் தமிழக வெற்றிக்கழகம்சார்பில்போட்டியிடும் வேட்பாளர்களை மதசார்பற்ற சமூக நிதி வெற்றி கூட்டணி சார்பில் ஆதரித்து வெற்றி பெறச் செய்ய விடுதலை சிறுத்தைகள் கட்சிகளப்பணி ஆற்ற உள்ளது.

இடது சாதிகள் எடுத்திருக்கும் முடிவு அவர்களுடைய அரசியல் உரிமை அரசியல் சுதந்திரம். தனித்து அவர்கள் போட்டியிடுகிறார்கள் என்றாலும் கூட தமிழக வெற்றிக் கழகத்தின் ஆட்சி தொடர்வதற்கு அவர்களின் ஆதரவு நீடிக்கும் என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே இடதுசாரிகள் தனித்துப் போட்டியிடுவதால் அது தமிழக வெற்றி கழகத்திற்கு எதிரான நிலைப்பாடு இல்லை.

கோகுல்தாஸ் கமிஷன் அறிக்கை வெளியாகி இருக்கிறது கள்ளக்குறிச்சியில்நடந்தகள்ளச்சாராய சாவுகளுக்கு பின்னணியை கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட ஆணையம். பல்வேறு பரிந்துரைகளை முன் வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசு இந்த ஆணையம் முன் வைத்திருக்கும் பரிந்துரைகளை ஏற்று அவற்றை நடைமுறைப்படுத்த முன் வரவேண்டும். படிப்படியாகமதுவிலக்கைநடைமுறைப்படுத்துவதற்கு ஆவணம்செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் வேண்டுகோள் விடுகிறோம். திமுக சார்பில் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒரு சிலர் நாகரிக வரம்புகளை மீறி மிகக் கடுமையாக முதலமை ச்சரையும் அவருடைய பொறுப்பையும் மாண்பையும் மீறி ஒருமையில் வசைப்பாடி இருப்பதும் அமைச்சர்நிர்மல்குமார் குறித்து பேசும்போது மக்களவை உறுப்பினர் ஆராசாதாயை பலிக்கும் வகையில் மிக இழிவான சொற்களால்வசைப்பாடி இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது இந்த போக்கை விடுதலை சிறுத்தைகள் கட்சி கண்டிக்கிறது.

பவள விழா கொண்டாடிய பாரம்பரியம் உள்ள இயக்கம் திமுக. பெரியார் அண்ணா கலைஞர்போன்றதலைவர்கள் பக்குவப்படுத்திய இயக்கம் திமுக. எவ்வளவு வசைபாடினாலும் அவர்களை வாழ்த்துவதே தன்னுடைய அரசியல் என்கிற முறையில் கலைஞர் மிகக்கடுமையாகவிமர்சித்தவர்களை கூட இழித்துப்பழித்துவசித்து பேசியதில்லை. இது மூன்றாம்தரஅரசு என்று கலைஞர் அரசை சட்டமன்றத்தில் அண்டே பேசியபோது கூட இதை திருத்திக் கொள்ள வேண்டும் இது நான்காம் தர அரசு சூத்திரர்களால் நடத்தப்படுகின்ற அரசு என்று பதில் சொன்னார்.

அண்ணாவை அவருடைய காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் அவருடைய தாயை அழிக்கும் வகையில் அனாதைகளை வைத்த போது அந்த படாதவர்களின் முன்னால் வெளிச்சம் பட்டு வையுங்கள் விளக்கு போடுங்கள் பொதுமக்கள் பார்க்கட்டும் அவர்களின் லட்சணத்தை புரிந்து கொள்ளட்டும் என்று சொன்னார் அண்ணா. தந்தை பெரியார் தமிழக அறிஞர் கலைஞரால் பக்குவப்படுத்தப்பட்ட இயக்கம் இன்று இவ்வளவு நிச்சயமான வார்த்தைகளால் நாயை பலிக்கும் எலி சொற்களால் அரசியல் எதிரிகளை விமர்சிப்பது கவலை அளிக்கிறது இது தமிழக வெற்றி கழகத்திற்கு எதிராக போகும் என்பதை விட திமுகவுக்கு எதிராக மக்களிடத்தில் கருத்து பதிவாகும் என்பதை திமுகதலைவர்ஸ்டாலினுக்கு அறிவுறுத்துகிறேன் அவர் வெளிப்படையாக இந்த போக்கை கண்டிக்க வேண்டும். பொதுமக்கள் அறியும் வகையில் அவர்களை கண்டிக்க வேண்டும்.

மீனாட்சி அம்மன் கோவில் திருப்பணிகள் நிறைவு பெற்று குடமுழுக்கு நடைபெற உள்ள சூழலில் அங்கே தமிழில் குடமுழுக்கு செய்யப்பட வேண்டும் என்கிற கோரிக்கை வலுத்துள்ளது இதை புறந்தல்லாமல். தமிழ் மக்களால் நிறுவப்பட்டு புதுப்பிக்க பெற்று வழிபாடு செய்யப்பட்டு வருகிற மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் எம்எல்ஏ ஒலிக்கவேண்டும். அன்னை மீனாட்சி தமிழ்க்கான அடையாளமாக மக்கள் நம்புகிறார்கள் அதேபோல சிவபெருமானையும் தமிழ் சங்கத்தின் தலைவர் என்று தமிழ் மக்கள் பாரம்பரிய பரம்பரையாக நம்புகிறார்கள். தமிழில் குடமுழுக்கு செய்வதற்கு யார் தடுப்பதுஎதுதடையாகஇருக்கிறது அரசு ஆணையிட வேண்டும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

அதேபோல ஐந்தொழில் சமூகத்தை சார்ந்த, விஸ்வகர்மா குலத்தை சார்ந்தவர்கள் அந்த கோவிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை என்கிற கோரிக்கை வைத்து வருத்தத்தை பதிவு செய்திருக்கிறார்கள் புதுப்பிக்கும் அனைத்து நிலைகளிலும் அவர்களின் பங்களிப்பு மகத்தானது கதவு முதல் தாழ்ப்பால்வரைஅனைத்திலும் அவர்கள் பங்கு இருக்கும் சூழலில் அவர்களையும் கோவிலுக்கு அனுமதிக்க முடியாது என்பது ஏற்பட ஏது அல்ல. ஆகவே அவர்களையும் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் சார்பாக கேட்டுக்கொள்கிறோம். விவசாய நிலத்தை வகை மாற்றம் செய்யும் போது மக்கள் கருத்தைகேட்பதுஅவசியமானது. மக்களின் உணர்வுகளுக்கு மாறாக வகை மற்றும் செய்யப்பட்டால் அது தவிர்க்கப்பட வேண்டும் விசிக வேண்டுகோள் தலைமை செயலகம் கட்டுவதற்கு 20 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதாக அரசு அறிவித்துள்ளது அந்த சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள மீனவ மக்கள் மற்றும் இவரப் பொதுமக்கள் அந்த முயற்சியை கைவிட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள் உணர்வுகளை மதித்து அதற்கு ஏற்ப அரசு முடிவு எடுக்க வேண்டும் என கூறினார்.



தென்காசி மாவட்டம் கடையம் ஒன்றிய அட்மா சேர்மன் குணசீலன் அவர்கள் இல்ல மணவிழாநிகழ்ச்சியில்தென்காசிசட்டமன்றஉறுப்பினர்டாக்டர்கலைகதிரவன்முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாபன் ஒன்றிய கழகச் bசெயலாளர்கள் கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன் கடையம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ் ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் மாவட்ட பிரதிநிதிகள் துரைப்பாண்டியன் அன்பழகன் ஒன்றிய துணைச் செயலாளர் வின்சென்ட் அவைத்தலைவர் ரவி சிறுபான்வழி ஹக்கீம் தொண்டர் அணி சுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்



மூங்கில்துறைப்பட்டு காவல் நிலையத்தில் குற்ற வழக்கில் குற்றவாளியை மூன்று மணி நேரத்தில் அதிரடியாக கைது செய்ததற்காக மூங்கில்துறைப்பட்டு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.அம்பிகா அவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.ஷஹ்னாஸ் அவர்கள் பாராட்டுச் சான்றிதழில் வழங்கி கௌரவித்தார்

# புளியரை சாலையில் வேகத்தடை அமைக்கப்படுமா?



திருமங்கலம் கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தென்காசி மாவட்டம் புளியரை கேரளா செல்லக்கூடிய நெடுஞ்சாலையில் வேகமாகச் செல்லும் கனரக லாரிகள் மற்றும்வாகனங்கள் அதி வேகத்தில் செல்வதால்.பள்ளி செல்லக்கூடிய மாணவர்கள் சாலை கடந்து செல்வதற்கு மிகவும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள்.

புளியரை அரசு மேல்நிலைப் பள்ளியில் 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த சாலை மார்க்கமாகத்தான். பள்ளிக்கும். வீடுகளுக்கு சென்று வருகின்றனர். மேலும் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் முக்கிய சாலையாக உள்ளது.

புளியரை சந்தன மாரியம்மன் கோவில் அருகிலும், பழைய போக்குவரத்து சோதனை சாவடி அருகிலும் இரு வேகத்தடைகள் அமைக்க வேண்டும்.

விபத்து நடக்கும் முன்பே நடவடிக்கை தேவை

தென்காசி மாவட்ட நிர்வாகம், மற்றும் தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்து உரிய பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். உடனடியாக அந்த பகுதியில் வேகத்தடை அல்லதுதடுப்புஅமைக்க வேண்டுமென. இயற்கை வள பாதுகாப்பு சங்கம் சார்பாககேட்டுக்கொள்கிறோம்

# தூத்துக்குடி ஸ்ரீபோத்தி விநாயகர் கோவிலில் மாபெரும் அன்னதானம்

## முன்னாள் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி தொடங்கி வைத்தனர்



தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் அருகேஉள்ளஸ்ரீபோத்தி விநாயகர் கோவிலில் விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் வருஷாபிஷேக விழாவை முன்னிட்டு சிறப்பு பூஜைகளும் மற்றும் பக்தர்களுக்கு மாபெரும் அன்னதானமும் நடைபெற்றது.

விநாயகரின் அவதாரத் தினமான இன்று விநாயகர் சதுர்த்தி கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தவகையில் தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று விநாயகர்சதுர்த்திமுன்னிட்டு அனைத்துக் கோவில்களிலும் சிறப்புப் பூஜைகள் அபிஷேகங்களும் நடைபெற்றது. வீதியில் உள்ள சிறு கோவில்களிலும் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட்டது.

இதைத் தொடர்ந்து தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் அருகேஉள்ளஸ்ரீபோத்தி விநாயகர் கோவிலில் விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் வருஷாபிஷேக விழா கணபதி ஹோமத்துடன் தொடங்கி சிறப்பு அலங்காரத்துடன் மஹா அபிஷேகம் பூஜைகள் சிறப்பாக நடைபெற்றது. காலை 10:30 மணியளவில் விநாயகருக்கு பால் அபிஷேகம், பன்னீர் அபிஷேகம் போன்ற பல அபிஷேகங்களும் மற்றும் தீபாராதனைகளும் விமர்சையாக நடைபெற்றது. விழாவில் ஸ்ரீபோத்தி விநாயகர் கோவிலில்திமுகவடக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி, தா்மகா்த்தா ராஜா பெரியசாமி,தொழிலதிபர் அசோக் பெரியசாமி ஆகியோர்சாமிதரிசனம் செய்தனர்.

பின்னர் பெரியசாமி திடலில் நடைபெற்ற அன்னதானத்தை திமுக வடக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் ஏராளமான பக்தர்கள் அன்னதானத்தில் கலந்து கொண்டு விநாயகரை வழிப்பட்டனர்.

நிகழ்ச்சியில் கோவில் செயலாளர்கள் செல்வராஜ், செல்வக்குமார், பொருளாளர் வேல்ச்சாமி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் முத்துச்செல்வம், ரத்தினசாமி, பேச்சிமுத்து, ஜீவானந்தம்,ராஜாமணி, அசோக், ரவீந்திரன், கீதா முருகேசன்,நாராயணன், பாஸ்கா், பாலமுருகன், சரவணன், தங்கச்சந்திரன், முருகேசன், ஆழ்வார்ராஜ், மந்திரமூர்த்தி, ராம்குமார், ராஜேந்திரன், அர்ஜூனன், பெரியசாமி, செல்வக்குமார், சித்திரைச்செல்வன், இளஞ்சூரியன், பெரியசாமி, சேகர்மணி, மேயர் நேர்முக உதவியாளர் ரமேஷ், பிரபாகர், ஜேஸ்பர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# மயிலாடுதுறை அருகே வங்கக்கடலில் எண்ணெய், எரிவாயு கிணறுகளுக்கு அனுமதிக்கோரி விண்ணப்பம்

மயிலாடுதுறைஅருகே வங்கக்கடலில் 5 எண்ணெய், எரிவாயு கிணறுகளுக்கு அனுமதிக்கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ள து.

மயிலாடுதுறை மாவட்டம் அருகே வங்கக் கடலில் 5 எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி கிணறுகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி கோரி ஹார்டி எக்ஸ்ப்ளோரேஷன் அண்ட் புரொடக்ஷன் இந்தியா நிறுவனம் விண்ணப்பம் செய்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு கிழக்கே வங்கக்கடலில் 81 சதுர கி.மீ. பரப்பளவில் எண்ணெய் வயல் அமைந்துள்ள நிலையில் அதே பகுதியில் மேலும் புதிய எண்ணெய் மற்றும் எரிவாயுக் கிணறுகளை அமைக்கக்கோரி மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு விண்ணப்பம் செய்துள்ளது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு நேற்று முன்தினம் வினாடிக்கு 9 ஆயிரத்து 786 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இதன்காரணமாக ஒகேனக்கலுக்கு வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடியாக நீர்வரத்து அதிகரித்தது. இதன்காரணமாக ஐந்தருவி, மெயின் அருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில்தண்ணீர்ஆர்ப்பரித்து கொட்டியது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்தாலும் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது. சுற்றுலா பயணிகள் அருவிகளில் உற்சாகாக குளித்து மகிழ்ந்தனர்.

இந்த நிலையில்,மேட்டூர் அணைக்கான நீர்வரத்து நேற்று 7 ஆயிரத்து 598 கனஅடியாக இருந்த நிலையில்,இன்று காலை 10 மணி நிலவரப்படி 8,618 கன அடியாக அதிகரித்துள்ளது. தற்போதைய நிலையில் அணைக்கு நீர்வரத்தானது தண்ணீர் திறப்பை விட குறைவாகவே இருப்பதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. அணையின் நீர்மட்டம் 88.21 அடியாக சரிந்துள்ளது. டெல்டா பாசனத்திற்காக 12000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.



கீழப்பாவூர் பேரூர் வார்டு செயலாளர் ராமர் அவர்களின் இல்ல மணவிழாவில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலைஞர் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் கீழப்பாவூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என் எல் சிவன் பாண்டியன் கடைய வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன் கடையநல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயா ஜயப்பன் பேரூர் கழகச் செயலாளர் ஜெகதீசன் மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் தங்கச்சாமி பேரூர் கழகதுணை செயலாளர் இல.அறிவழகன் இசக்கிமணி, காலசாமி காளிமுத்து மற்றும் பலர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்

# ஈரோடு ஆசிரியர் சசிக்குமாருக்கு தேசிய அளவிலான சிறப்பு விருது

## இந்திய அளவில் 3ம் இடம், தமிழ்நாட்டில் 2ம் இடம், ஈரோடு மாவட்டத்தில் முதலிடம்




ஈரோடு சிஎஸ் அகாடமி (சிபிஎஸ்இ) பள்ளியின் வணிகவியல் ஆசிரியர் திரு. சசிக்குமார் அவர்களுக்கு, வர்த்தக ஆசிரியர்கள் அமைப்பு (Commerce Teachers' Foundation – CTF) சார்பில் "சிறந்த வணிகவியல் ஆசிரியர் – சிறப்பு விருது 2026" வழங்கப்பட்டுள்ளது. வணிகவியல் கல்வியில் அவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பைப் பாராட்டும் வகையில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. சிபிஎஸ்இ 2025–26 தேர்வு முடிவுகளின் அடிப்படையில், கற்பித்தல் மற்றும் மாணவர்களின் கல்விச் சாதனைகளில் சிறந்து விளங்கியதற்காக இவ்விருது வழங்கப்படுகிறது. சசிக்குமார் இந்திய அளவில் 3–ம் இடத்தையும், தமிழ்நாட்டில் 2–ம் இடத்தையும், ஈரோடு மாவட்டத்தில் முதலிடத்தையும் பெற்று, ஈரோட்டிற்கும் சிஎஸ் அகாடமிக்கும் தேசிய அளவில் பெருமை சேர்த்துள்ளார்.

செப்டம்பர் 13, 2026 அன்று புது தில்லியில் உள்ள இந்தியா இன்டர்நேஷனல் சென்டரில் நடைபெற்ற 18–வது சிடிஎஃப் பாராட்டு விழாவில் அவர் இவ்விருதைப் பெற்றுக் கொண்டார்.

சசிக்குமாரின் இச்சாதனை அவரது அர்ப்பணிப்பு, கற்பித்தல் மீதான ஆர்வம் மற்றும் கல்விச் சிறப்பிற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. ஈரோடு, தமிழ்நாடு மற்றும் சிஎஸ் அகாடமிக்குப் பெருமை சேர்க்கும் இவ்வங்கீகாரம், தரமான கல்வி மற்றும் சிறந்த கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவதில் பள்ளி நிர்வாகத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

# எல்லையில் படைகளை கணிசமாக குறைத்தது சீனா: பாதுகாப்பு அமைச்சகம் தகவல்



புது டெல்லி: இந்திய – சீன எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு (LAC) பகுதியில் சீனப் படைகளின் குவிப்பு கடந்த ஆண்டு முதல் குறைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் காரணமாக இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் வெளியான அறிக்கையில், 'இந்தியாவின் வடக்கு எல்லைப் பகுதியில் சீன ராணுவத்தின் (PLA) படைகள் அதிகளவில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், 2025–ம் ஆண்டில் அவற்றில் கணிசமாக குறைக்கப்பட்டது. எல்லைப் பகுதியில் சீனா 10 ஒருங்கிணைந்த படைப் பிரிவுகளை நிறுத்தியிருந்தது. அதேவேளையில், எல்லைக்கு அப்பால் உள்ள வழக்கமான பயிற்சிப் பகுதிகளில் மேலும் 10 படைப் பிரிவுகள் நிலைநிறுத்தப்பட்டிருந்தன

இதன் அடிப்படையில் கணக்கிட்டால், கடந்த ஆண்டு எல்லைப் பகுதியில் சுமார் 40,000 முதல் 50,000 வரையிலான சீனப் படைகளும், அதே எண்ணிக்கையிலான படைகள் குறிப்பிட்ட பயிற்சிப் பகுதிகளிலும் இருந்தன. அக்டோபர் 2024–ல் அனைத்து மோதல் பகுதிகளிலிருந்தும் படைகளை விலக்கிக்கொள்வது குறித்த உடன்பாடு எட்டப்படுவதற்கு முன்பு, லடாக் பகுதியில் மட்டும் 60,000–க்கும் மேற்பட்ட சீனப் படைகள் இருந்ததாக மதிப்பிடப்பட்டிருந்தது.

அரசியல், தூதரக மற்றும் ராணுவ நிலைகளில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகள் காரணமாக சீனா தனது படைகளை 2025ல் கணிசமாக குறைத்துக்கொண்டது. எல்லைப் பகுதிகளில் இந்திய ராணுவத்தின் படைக் குவிப்பு வலுவாக உள்ளது, எந்தவொரு அவசரச் சூழலையும் எதிர்கொள்ள நமது படைகள் தயாராக உள்ளன' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவையில் மாநில அளவிலான 37வது டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டி

## தமிழகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகள் ஆர்வமுடன் பங்கேற்பு



கோவை திருமலையாம்பாளையத்தில் உள்ள நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் மாநில அளவிலான 37–வது டேக்வாண்டோ சாம்பியன்ஷிப் போட்டிகள் மூன்று நாட்கள் நடைபெற்றன.

தமிழ்நாடு ஒலிம்பிக் சங்க தலைவரும் டேக்வாண்டோ சங்க தலைவருமான ஐசரிகணேஷ் அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்ற போட்டிகளுக்கான தொடக்கவிழா, கோயம்புத்தூர் மாவட்ட டேக்வாண்டோ சங்க தலைவர் லட்சுமி நாராயணன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் சிஜுகுமார் அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக தமிழக மதுவிலக்கு துறை அமைச்சர் விக்னேஷ் கலந்து கொண்டு போட்டிகளை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு டேக்வாண்டோசங்கபொதுச்செயலாளர்செல்வமணி, திண்டுக்கல் மாவட்ட சங்கசேர்மன் கமலஹாசன், தலைவர் சர்வாகன் பிரபு,மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் கோதண்டன், மனோகர், சுரேஷ்கனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டிகளில் தமிழகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

பூம்சே மற்றும் கிரோகி ஆகிய இரு பிரிவுகளில், வீரர், வீராங்கனைகளின் வயது அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் வீரர், வீராங்கனைகள் வேகம், உடல் கட்டுப்பாடு, துல்லியம் மற்றும் தற்காப்புத் திறனை வெளிப்படுத்தி தங்களது திறமையை நிரூபித்தனர்.

இதில் தேர்வு செய்யப்படும் வீரர்,வீராங்கனைகள் அடுத்துநடைபெறஉள்ள தேசிய அளவில் பங்கேற்க உள்ளதாக ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர். ஒலிம்பிக் போட்டியில் இடம்பெற்றுள்ள டேக்வாண்டோ விளையாட்டின் மீது தமிழகத்தில் இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடையே ஆர்வம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும்,

குறிப்பாகமாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கும்வீரர்,வீராங்கனைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, தமிழகத்தில் டேக்வாண்டோ விளையாட்டின் வளர்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற பரிசு வழங்கும் விழாவில், டேக்வாண்டோ சங்க மாநில,மாவட்ட நிர்வாகிகள் ஜோதி பாசு,நடராஜன்,எஸ்ரா ஸ்டாலின்,ஜகதீஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்டம் சித்தோடு ஸ்ரீ கஞ்சமலை சித்தர் சன்மார்க்க சங்கத்தின் நிறுவனர் செல்லதுரை இல்ல வளையலணி விழாவிற்கு நேற்று (14.09.2026) வருகை புரிந்த தமிழக அரசு கால்நடைத் துறை அமைச்சர் கமலி அவர்களை, மேட்டாங்காட்டு இயற்கை விவசாயியும் சமூக நற்பணி செயற்பாட்டாளருமான அண்ணாதுரை எனும் கௌசிகன் வரவேற்றார். இந்நிகழ்வில் வீ த லீடர்ஸ் தன்னார்வலர்கள் சுபஸ்ரீ, ரத்னாதேவி, பிரபு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்

# 90 elite officers and CIA: Newly declassified video captures US pilot's daring Iran rescue

*Months after the US Air Force rescued two of its pilots shot down in Iran, newly declassified videos have shown the risky operation.*

*The videos, first obtained by CBSE News' '60 minutes', showed the search and rescue of the two officers – "Alpha" and "Bravo" – who ejected their jets after being shot down by Iranian forces.*

*In response to the incident, the US deployed over 90 US service members to Iran for the search and rescue of the two officers. Along with this, hundreds of personnel were involved in the air, and several thousand others provided support, CBS News added.*




*The rescue operation, which was carried out in broad daylight, shows rescue officers reaching officer "Bravo", two days after the fighter jet was shot down. Bravo, who is being referred to by his callsign for security purposes, had been badly wounded when he ejected as his parachute was damaged and he plummeted to the ground. "At one point when I looked up and saw no parachute, that was the most terrifying thing I've ever seen," Bravo told '60 Minutes' in his first public account.*

*CBS News reported that the pilot, despite a broken back and other injuries, climbed a 7,000–foot ridgeline to await rescue. The report added that Bravo was eventually able to communicate with US forces and indicate that he was injured but moving, after which the CIA used a combination of intelligence capabilities and a deception operation to help locate him. In his first–ever interview, Bravo told 60 Minutes that seeing his rescuers "was one of the greatest moments of his life." Pilot "Alpha", who landed five miles away from Bravo, was also rescued in a similar manner, but eight hours after he ejected from the jet.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.